சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 16.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | நடராஜன் சேதுபதி |
| தந்தை பெயர் | : | சுதானந்தம் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | இளநிலை மருத்துவர், அறுவைசிகிச்சை பிரிவு |
| வயது | : | 40 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1ம் எதிரி ஆஜர். 2 எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை

பிரிவில் இளநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.05.2020 ஆம் தேதி மலையூர் கிராமம் ஊர்குடி அ.சா-1 சூரியா வயது (22) என்பவர் மாலை 4.00 மணியளவில் மருத்துவமனைக்கு வந்து தன்னை தெரிந்த 2 நபர்கள் மரக்கட்டையால் தாக்கியதாக கூறியதன் பேரில் அன்று பணியில் இருந்த டாக்டர் அரவிந்த் என்பவர் அவரை உள்நோயாளியாக அனுமதித்திருந்தார். அவரை நான் பார்வையிட்டு சிகிச்சை அளித்தேன். அவருக்கு மூக்கு, இடது காது ஆகியவைகளில் இரத்தம் வந்தது. தலையில் வலி மற்றும் நெஞ்சில் அடி பட்டதாக கூறினார். அவருக்கு கண் காது, மூக்கு தொண்டை மருத்துவரும், எலும்பு முறிவு மருத்துவரும் சிகிச்சை அளித்துள்ளார்கள். தலையில் அடிப்பட்ட காரணத்தினால் டாக்டர் அரவிந்த் மூளைக்காக CT ஸ்கேன் பரிந்துரை செய்துள்ளார் என்றும், கண், காது, மூக்கு, தொண்டை மருத்துவர் தேவேந்திரன் அவர்கள் முகத்திற்காக CT ஸ்கேன் பரிந்துரை செய்துள்ளார் என்றும், காயம் உற்ற நபர் மருத்துவமனையில் இருந்து தன்னிச்சையாக சென்றுவிட்டதால் மேற்படி நபருக்கு காயத்தின் தன்னை குறித்து காய சான்றிதழ் குறிப்பிட முடியவில்லை என சான்று அளித்துள்ளேன். நான் வழங்கிய மருத்துவ சான்று **அ.சா.ஆ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்யவில்லை.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

இந்த காயம் பட்ட நபரை பார்த்த மாத்திரத்திலேயே தோன்ற கூடிய காயங்களை பற்றி பணியில் இருந்த திரு. அரவிந்த் என்பவர் குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.10.16 17:46:53 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.